பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

# இஸ்லாமிய சட்டங்கள்

## இஸ்லாமிய சட்டத்தினை அறிதல்

لكل جعلنا منكم شِرعة و مِنهاجا (سورة مادة : 48)

உங்களில் ஒவ்வொருவருக்கும் நாம் மார்க்கம் மற்றும் தெளிவான பாதையினையும் அமைத்துள்ளோம்.(மாயிதா : 48)

மனிதனுடைய இவ்வுலக மற்றும் மறுவுலகின் வெற்றியும் பரிபூர்ணமான இஸ்லாத்தினை அறிந்து தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் அதனை அமுல்படுத்துவதாகும்.இஸ்லாமிய சட்டங்கள் மனித ஈடற்றத்திற்கான வழியாகும்.

இஸ்லாமிய சட்டங்கள் மூன்று வகைப்படும்.

- நம்பிக்கை சார்ந்த சட்டங்கள்(அகாயித்)
- நடைமுறையியல் சட்டங்கள்(அஹ்காம்)
- ஒழுக்கவியல் சட்டங்கள்(அஹ்லாக்)

**நம்பிக்கை சார்ந்த விடயங்கள்** , மனிதனுடைய சிந்தனை மற்றும் அவனது நம்பிக்கை சார்பானதாகும். மனிதன் என்ற அடிப்படையில் அவன் கட்டாயம் ஆதாரங்களுடன் தனது கொள்கையினை புறிந்து நம்பிக்கை கொள்ளவேண்டும்.இந்த விடயத்தில் அவன் தனிப்பட்ட மற்றொருவரை பின்பற்றலாகாது.

**நடைமுறையியல் சட்டங்கள்**, நாம் செய்யவேண்டிய நல்லவிடயங்கள் மற்றும் தவிர்ந்து கொள்ள வேண்டிய கெட்டவிடயங்கள்  என்பவற்றை சரியான நம்பிக்கையோடு இறைவனின் கட்டளைகளை பின்பற்றுவதாகும்.உதாரணமாக தொழுகை ,ஸகாத், புறம் பேசுவதை தவிர்த்தல் போன்றவற்றை கூறலாம்.

**ஒழுக்கவியல்** , மனித உளவியல் மற்றும் அவனது ஆத்மா சார்பானதாகும்.மனித இயல்புக்கு ஏற்ற நற்குணங்களை(நீதி,தர்மம்,வீரம்.......) அதிகறித்து அதற்கு எதிர்மறையான தீய குணங்களில்(பொறாமை,நயவஞ்சகம்.....) இருந்து மனிதனை பாதுகாக்கும் சட்டவியலாகும்.

இஸ்லாமிய அறிவுலகில் அஹ்காம் எனும் நடைமுறை சட்டங்களின் முக்கியத்துவத்தினை அறிந்ததன் பின் அதனை பெற்றுக் கொள்ளும் வழிமுறை பற்றி அறிவது அவசியமாகும்.இஸ்லாமிய சட்டங்களை பெற்றுக்கொள்ளும் முதல் வழிமுறை இஜ்திஹாத் எனப்படும் அல்குர்ஆன் , சுன்னாவின் ஊடாக தனது அறிவாய்ந்த ஆராய்ச்சியின் மூலம் பெறப்படும் சட்டமுறையாகும். இவ்வாறு முடியாத போது தக்லீத் எனப்படும் ஓர் இஸ்லாமிய சட்டத் தொகுப்பினை தனது இஜ்திஹாதின் மூலம் பெற்ற ஓர் இஸ்லாமிய அறிஞரைப் பின்பற்றுவதாகும்.

இஸ்லாமிய சட்டதிட்டங்களை அறிந்து அதனை

நடைமுறைப்படுத்த மூன்று வகையான தீர்வுகள் உள்ளன.

- இஜ்திஹாத்
- தக்லீத்
- இஹ்தியாத்: தான் செய்தது சரியான வழிமுறையிலான இஸ்லாமிய சட்டம் என்றும் தன்மீதான இறைவனின் சட்டத்தினை தான் நிறைவேற்றிவிட்டேன் என்ற இறுதி முடிவிற்கு வரும் நிலையாகும்.

## நடைமுறைச் சட்டத்தின் வகைகள்

ஓர் பொதுவான கண்ணோட்டத்தின் படி அஹ்காமினை இரு வகையாக வகைப்படுத்த முடியும்.

- **தக்லீபீ**: மனிதனுடைய கடமையினை கூறி அதன் முலம் இறைவனால் வழங்கப்படும் வெகுமதி பற்றி கூறுவதாகும்.

  உதாரணம்: தொழுகை வாஜிபாகும் அதனை விட்டால் தண்டனை உண்டு.

  - **வஸ்யீ**: மனிதனால் நடைமுறைப்படுத்தப்படும் செயல்கள் சரியானதா ? அல்லது தவறானதா ? என்று பாகுபடுத்தும் சட்டங்களாகும்.

## தக்லீபீயின் வகைகள்

  - வாஜிப்: நடைமுறைப்படுத்துவது கட்டாயமாகும்.அதனை தவிர்ப்பது தண்டனைக்குறியதாகும்.உதாரணம்:தொழுகை...

- ஹராம்: நடைமுறைப்படுத்தாமல் தவிர்ந்து கொள்வது கடமையாகும்.அதனை நிறைவேற்றுவது தண்டனைக்குறியதாகும்.உதாரணம்:பெய்கூறுதல்...
- முஸ்தஹப்: நடைமுறைப்படுத்துவது சிறந்ததாகும்.அதனை தவிர்ப்பதால் தண்டனை வழங்கப்படமாட்டாது.உதாரணம்:தஹஜ்ஜத் தொழுகை.
- மக்ரூஹ்: தவிர்து கொள்வது சிறந்ததாகும். நடைமுறைப்படுத்துவது குற்றமல்ல .உதாரணம்: தொழுகையில் கருப்பாடை அணிதல்.

  வணக்க வழிபாடுகளில் மக்ரூஹ் என்பதால் அவ்வணக்கங்களுக்க வழங்கப்படும் வெகுமதி குறைவாக வழங்கப்படுகிறது.

- முபாஹ்: அதனை செய்வதினாலோ அல்லது விடுவதனாலோ எவ்வித வெகுமதிகளோ தண்டனைகளோ வழங்கப்படமாட்டாது.

  உதாரணமாக அதிகமான அன்றாட மனித காரியங்களைக் கூறலாம்.

## இஜ்திஹாத்

இஸ்லாமிய மார்க்க சட்டங்களை அறிந்து அதன்படி செயற்பட வேண்டியது மனிதர்களுக்க அவசியமாகும்.அந்த வகையில் அதனை நடைமுறைப்படுத்த பின்வரும் இரு வழிகளில் ஒன்றினை கட்டாயம் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

1. ஆதாரபூர்வமானது அல்லது பரிபூரண விரிவாக்கம்(இஜ்திஹாத்)
2. ஆதாரபூர்வமற்றது அல்லது பொதுத்தன்மைவாய்ந்த்து.(தக்லீதீ)

அனைத்து மனிதர்களும் இவ்விரண்டியில் ஒன்றினை தேர்ந்தெடுப்பதில் பரிபூரண சுதந்திரம் உடையனர்.இஸ்லாத்தின் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை ஓர் தனித்துவம் மிக்க ஆற்றல் மற்றும் ஆர்வம் உள்ளோர் இஸ்லாமிய போதனாசாலைகளில் இனைந்து தமது அறிவினைப் பெருக்கிக் கொள்வதோடு சமூகத் தேவையினையும் பூர்த்திசெய்து கொண்டே உள்ளனர். இவ்வாறு கல்விகற்கும் இவர்கள் இஜ்திஹாத் எனும் தரத்தினை அடைவதற்கு இவர்களுக்கு இருக்க வேண்டிய நிபந்தனைகள் பற்றியே இங்கு கூறவுள்ளோம்.

**இஜ்திஹாத்** : இதன் மொழிக்கருத்து ‘முயற்சி செய்தல்’ என்பதாகும்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தின் படி ‘ இஸ்லாமிய அடிப்படை நூல்களிலிருந்து இஸ்லாமிய சட்டங்களை ஆராய்ந்து வெளியெடுப்பதாகும்’.

இஜ்திஹாத் மேற்கொள்ளுபவரை ‘முஜ்தஹீத் அல்லது பகீஹ்’ என்று அழைப்பர்.

## இஜ்திஹாதின் ஆரம்ப படிமுறைகள்

இஜ்திஹாத் மேற்கொள்வதற்கான முதற்கட்ட படிமுறையான கற்றல் என்ற பிரிவில் பின்வரும் கலைகள் அடங்கும்.

1. அறபு மொழி :

- ஸர்ப்: வெவ்வேறுபட்ட  கருத்துக்களில் சொற்களை உருவாக்கும் கலையாகும்.

- நஹ்வு: சொற்களை ஒன்றினைத்து வசனங்கள் உருவாக்கும் கலையாகும்.
- பலாகா: மொழியினை  மெருகூட்டி தனது எழுத்து ,பேச்சு மற்றும் அதனை அழகூட்டும் கலையாகும்.
- லுகத்: சொற்களின்  கருத்தினை அறியும் கலையாகும்.

2.மன்திக் : சிறப்பான முறையில் சிந்திப்பதினையும் ஆதாரங்கள் முன்வைப்பதைப் பற்றிய அறிவாகும்.

3.உசூலுல் பிக்ஹ் : சட்டங்களை உருவாக்கும் முறையாகும்.

4.ரிஜால் : ஹதீஸ் அறிவிப்பாளர்களை அறிந்துகொள்ளும் கலையாகும்.

5.திராயா : ஹதீஸ் கலையில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள், ஹதீஸ்யின் உட்பொருள்,மற்றும் தவறான பார்வையிலிருந்து தவிர்த்து ஹதீஸினை அறியும் கலையாகும்.

6.தப்ஸீர் வா உலூமுல் குர்ஆன் : குர்ஆன் பற்றிய கலையாகும்.

7.மனித மரபு மற்றும் அன்றாட சொற்பிரயோகம் பற்றிய அறிவு.

8.முன்னோர்களின் அறிவார்ந்த அமர்வுகள் மற்றும் இஜ்மாக்கள் பற்றிய அறிவு.

9.அஹ்லுஸ் சுன்னத் உலமாக்களின் பத்வா பற்றிய அறிவு ; குறிப்பாக கருத்து வேறுபாடு உள்ள விடயங்கள்.

10. இஸ்தின்பாத் எனப்படும் சட்டத் திரட்டு முறையில் முயற்சியினை மேற்கொள்ளல்.

மேற்கூறப்பட்ட கலைகளில் தேர்ச்சியடைந்த ஓர் இஸ்லாமிய அறிஞர் தன் மீதான அனைத்துவித நிபந்தனைகளையும் கவனத்தில் கொண்டு இஸ்லாமிய சட்டங்களை கூறுவார்…………

குறிப்பு:

- இஜ்திஹாத் வாஜிப் கிபாயா ஆகும்.ஒருவர் இதனை செய்வதன் மூலம் ஏனையோரின் கடமை நிவர்த்தி செய்யப்படுகிறது.
- யார் ஒருவர் பத்வா வழங்கும் தகுதியற்றவறோ அவர் பத்வா வழங்குவது ஹராம் ஆகும்.
- இஜ்திஹாத் ஆண்களுக்கு மட்டும் உரியதல்ல.பெண்களும் தமது முயற்சியின் மூலம் இஜ்திஹாத் எனும் படித்தரத்தை அடையமுடியும்.

## சட்ட மூலாதாரங்கள்

1. அல் குர்ஆன்.
2. சுன்னத்(14 மஃசூமீன்களின் சொல்,செயல்,அங்கீகாரம்.)
3. பகுத்தறிவு.
4. இஜ்மா(மார்க்க சட்டங்களில் மார்க்க அறிஞர்களின் ஒன்றுபட்ட தீர்வு)

**குர்ஆன்** : நபி(ஸல்) அவர்களுக்கு இறைவனிடம் இருந்து அருளப்பட்ட வஹியாகும்.எவ்வித  கூட்டல் – குறைத்தல் இன்றி எமது கைகளுக்கு வந்தடைந்ததாகும். இஸ்தின்பாத் மேற்கொள்வதற்கான முதல்தர மூலகம் இதுவே ஆகும்.

**சுன்னத் :**

- சொல் : மஃசூமீன்கள் எனப்படும் 14 பரிசுத்தவான்களின் கூற்றுக்கள் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களில் ஒன்றாகும். இவை ஹதீஸ் நூற்களில் தொகுக்கப்பட்டுள்ளன.
- செயல் : மஃசூமீன்கள் அனைத்துவித பிழைகள் , தவறுகல்கள் மற்றம் பாவங்களில் இருந்து தூய்மையாக்கப்பட்டவர்களாகும். அவர்களின் நடைமுறை வாழ்வியல் பண்பாடுகள் இஸ்லாமிய மூலாதாரங்களில் ஒன்றாகும்.
- அங்கீகாரம் : நன்மையை ஏவி தீமையினைத் தடுத்தல் என்பது ஓர் சமூகக் கடமையாகும். தனிநபரோ அல்லது சமூகமோ பிழையான வழிமுறையினை பின்பற்றும் போது அதனைத் தடுப்பது கடமையாகும். அந்த வகையில் மஃசூமீன்கள் தமக்கு முன்நிலையில் நடக்கும் தவருகளை சுட்டிக்காட்டி சரியான வழிமுறையினை சமூகத்திற்கு வழிகாட்டியுள்ளனர். ஒரு காரியத்தை அங்கீகரித்து இது சரியனவும் ஒன்றை புரக்கனித்து தவரு என்றும் கூறியுள்ளனர். இது ஓர் நிபந்தனையின் பெயரில் இஸ்லாமிய மூலாதாரமாக பார்க்கப்படும். இமாம் தகீய்யா என்ற காலகட்டத்தில் இல்லாத பட்சத்தில் இமாமின் அங்கீகாரம் இஸ்லாமிய மூலாதாரங்களில் ஒன்றாக கணிக்கப்படும்.

**பகுத்தறிவு மற்றும் இஜ்மா :**

இஸ்லாமிய சட்ட மூலாதரங்கலான

அல்குர்ஆன் மற்றும் சுன்னாவிற்கு அடுத்தபடியான மூலதாரமாக மனிதனின் பகுத்தறிவு நோக்கப்படுகிறது. அல்குர்ஆன் ,சுன்னாவில் ஓர் பிரச்சனைக்கு தீர்வு கூறப்படாத பட்சத்தில் மனித பகுத்தறிவு கூறும் தீர்வினை இஸ்லாமிய மூலாதாரமாக கருத்தில் கொண்டு அது நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும் இஸ்லாமிய அறிஞர்கள் ஓர் தீர்வில் ஒன்றுபட்ட தீர்வினைக் கொண்டவர்களாகவும் அதற்கு இமாமின் திருப்தியும் இருக்கவேண்டும்.

## தக்லீப்

தக்லீப் எனப்படுவது இறைமார்க்கம் இஸ்லாதில் கூறப்பட்ட தன்மீதான கடமைகளை நிறைவேற்றும் தன்மையாகும்.

தக்லீபின் நிபந்தனைகள்:

1.பருவவயதினை அடைதல்.

2.புத்திசாளி.

3.கடமையினை நிறைவேற்றும் சக்தியுடையவராக இருத்தல்.

பருவவயதினை அடைவதின் அடயாளங்கள்:

- ஆண்: 1. அக்குள் மற்றும் ஆணுறுப்பினைச் சூழ முடி முளைத்தல்.

  2.இந்திரியம் வெளியாதல்.

  3. இஸ்லாமிய திகதியின் படி 15 வயதினை பூர்த்தியடைதல்.

❖ பெண்: 1.இஸ்லாமிய திகதியின் படி 9 வயதினை பூர்த்தியடைதல்.

2.இந்திரியம் வெளியாதல்.

3. அக்குள் மற்றும் பெண்ணுறுப்பினைச் சூழ முடி முளைத்தல்.

## தக்லீத்

தக்லீத் என்பது இஸ்லாமிய மூலாதரங்களிலிருந்து தனது அறிவாய்ந்த ஆராய்ச்சியின் படி இஸ்லாமிய சட்டத் தொகுப்பினை கொண்டுள்ள ஓர் இஸ்லாமிய அறிஞரை( மர்ஜஃ) பின்பற்றுவதாகும்.

மனிதன் தான் வாழும் சூழலில் தனக்கான அனைத்து விடயங்களையும் சிந்தித்து , பகுத்தறிந்தே நடைமுறைப் படுத்துகின்றான். இதன்படி தன்மீதான இஸ்லாமிய சட்டங்களை

அறிந்து அதனைப் பின்பற்றுவதும் அவன் மீதான கடமையகும். ஓடும் ஓய்வற்ற தன் வாழ்வில் தன்னால் ஓர் பிரச்சனைக்கு தீர்வு பெற முடியாத பட்சத்தில் அதில் பிரசித்தி பெற்ற நிபுணர்களை அணுகி தனது பிரச்சனைக்கு தீர்வினை அடைந்து கொள்கின்றான். இதைபோன்றே ,இஸ்லாமின சட்டங்களை தனது அறிவின் மூலம் அடைந்து கொள்ள முடியாத பட்சத்தில் அதில் பிரசித்தி பெற்ற அறிஞர்களை அணுகி

அவர்களின் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவது மனிதயியல்பாகும்.

மிகச் சுருக்கமாகக்  கூறுவதென்றால் நோய்யுள்ள ஓர் சாதாரன மனிதன் தனது நோய்க்கான தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு மருத்துவத் துறையிள் பான்டித்தியம் பெற்ற ஓர் மருத்துவரை நாடுவது பொன்ற ஓர் விடயமே தக்லீத் ஆகும்.

நபி(ஸல்) மற்றும் இமாம்களின் பார்வையிளும் தக்லீத் ஓர் முக்கிய விடயமாக நோக்கப்படுகிறது.

## தக்லீத் பேனப்படாத விடயங்கள்

முகல்லிப் தனது வாழ்நாளில் தக்லீபினைப் பேனாமல் செயற்பட்டிருந்தால் மூன்று நிலைகளில் அச்செயற்பாடுகள் சரியானதாகக் கணிக்கப்படும்.

1.தான் தன்மீதான கடமையினை உரிய முறையில் நிறைவேற்றியுள்ளதை உணர்ந்து கொள்ளல்.

2.தான்னால் மேற்கொள்ளப்பட்ட கடமைகள் தற்போது உள்ள ஓர் இஸ்லாமிய அறிஞரின் பத்வாவிற்கு ஏற்றவாறு அமைதல்.மேலும் அவரின் பத்வாவின் படி தனது அமல்களை நிறைவேற்றுதல்.

3.தன்னால் மேற்கொள்ளப்பட்ட அமல் ஓர் இஸ்லாமிய அறிஞரின் பத்வாவிற்கு ஏற்றவாறு அமைதல்.

முஸ்தஹபான மற்றும் மக்ரூகான விடயங்களிலும் ஓர் இஸ்லாமிய அறிஞரைப்பின்பற்றுவது அவசியமாகும்.

அனைத்து மார்க்க அறிஞர்களையும் பின்பற்றலாமா? என்று

நோக்கும் பொழுது பின்வரும் நிபந்தனைகளைக் கொண்ட ஓர் இஸ்லாமிய மார்க்  அறிஞரைத்தான் பின்பற்றுவது சரியாகும்.

1.முஜ்தஹித்.

2.ஆண்.

3.ஹலாழான வழியில் பிறந்திருத்தல்.

4.பருவவயதை அடைந்திருத்தல்.

5.புத்திசாளியாக இருத்தல்.

6.நீதியானவராக இருத்தல்.

7.பன்னிரு இமாம்களைப் பின்பற்றும் ஷீஆவாக இருத்தல்.

8.இஹ்தியாதே வாஜிபின் பிரகாரம் அதிமேதையாக இருத்தல்.

9.இஹ்தியாதே வாஜிபின் பிரகாரம் உயிரோடு இருத்தல்.

10. இஹ்தியாதே வாஜிபின் பிரகாரம் தனது மனோஇச்சைக்கு முரன்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இஹ்தியாதே வாஜிப்:

## சுத்தம்(தஹாரத்)

சொற்பொருள் சுத்தமாகும்.

முதஹ்ஹிராத்  சொற்பொருள்: சுத்தப்படுத்தக் கூடியவை.

இஸ்லாமிய  சட்ட மரபின் படி அசுத்தங்களை(நஜ்ஸ்) தூய்மைப் படுத்தக் கூடியவையாகும்.

## தூய்மைப்படுத்தக்கூடியவை(முதஹ்ஹராத்)

அசுத்தம் எனப்படும் நஜ்ஸ் வகைகளை தூய்மைப் படுத்தக்கூடியவை 10 ஆகும்.

- தண்ணீர்
- சூரிய ஒளி
- பூமி
- இஸ்திஹாலா
- இன்திகால்
- இஸ்லாம்
- தபீய்யத்
- முஸ்லிம்களின் பார்வையிலில் இருந்து மறைந்திருத்தல்
- நஜ்ஸை நீக்குதல்
- இஸ்திப்ராஃ

### தண்ணீர்:

நீர் அதிகமான அசுத்தங்களை தூய்மைப் படுத்தக் கூடிய ஒன்றாகும்.

இருவகைப்படும்:

1.கலப்படமற்றவை.

2.கலப்படமானவை.

**கலப்படமானவை:** தண்ணீருடன் வேறு ஏதாவது திரவப்

பாணங்கள் கலந்திருத்தல். உதாரணம்-
பழச்சாறுவகைகள்.

இதன் சட்டம்: அசுத்தங்களை சுத்தப்படுத்தாது, அசுத்தங்கள் இதனுடன் கலக்கப்பட்டால் இதுவும் அசுத்தமாகும், இதன் மூலம் வுழூ செய்தாலோ அல்லது கடமையான குளிப்பினை நிறைவேற்றினாலோ அது செல்லுபடியற்றதாகும்.

**கலப்படமற்றவை:** எவ்விதமான கலப்படமும் செய்யப்படாத தூய்மையான நீராகும். உதாரணம்: கடல் நீர்.

இதில் ஐந்து வகையான தண்ணீர் உள்ளடங்கும்:

1.384 லீட்டரை விட அதிகமானவை(குர்)

2.384 லீட்டரைவிட குறைவானது(கலீல்)

3.கிணற்றுநீர்

4.ஓரிடத்தில் தரித்து நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கும் நீர்.

5. மழைநீர்.

குறிப்பு: கலப்படமான தண்ணீரா? அல்லது கலப்படமற்றதா ? என்று சந்தேகத்திற்கு உற்பட்ட தண்ணீர் கலப்படமானது என்று கருதப்படும்.அதன் மூலம் வுழூச்செய்வதோ கட்டாயக்குளிப்பினை நிறைவேற்றுவதோ கூடாது.அது எவ்வித அசுத்தங்களையும் தூய்மைப்படுத்தாது.

**அசுத்தங்களை நீக்கக்கூடிய தண்ணீரின் சட்டங்கள்:**

1. கலப்படமற்றதாக இருத்தல்.
2. சுத்தமானதாக இருத்தல்.
3. தண்ணீரின் மூலம் அசுத்தத்தை தூய்மைப் படுத்திய பின் அசுத்தத்தின் அடயாலம் இல்லாமல் இருத்தல்.
4. தண்ணீரை தடுக்கக்கூடியவைகள் அசுத்தத்தில் இல்லாமல் இருத்தல்.
5. அசுத்தத்தை நீக்குவதனால் தண்ணீர் கலப்படமானதாக மாறாமல் இருத்தல்.

**கலப்படமற்ற நீரின் சட்டங்கள்:**

1.அசுத்தங்களை தூய்மைப்படுத்தும்.

2.384 லீட்டருக்கு உட்பட்ட நீரைத் தவிர்ந்து ஏனைய வகை நீர்வகைகள் அசுத்தத்துடன் கலப்பதன் மூலம் அதன் நிறம்,சுவை மற்றும் வாடை மாற்றம் அடையாமல் இருந்தால் அது சுத்தமான நீரான கருதப்படும்.

**சந்தேகத்திற்கு உற்பட்ட நீரின் சட்டம்:**

- கலப்படமற்ற தூய்மையான காணப்பட்ட தண்ணீர் , கலப்படம் செய்யப்பட்டதா அல்லது இல்லையா என்று சந்தேகம் ஏற்பட்டால் அந்நீரினை கலப்படம் செய்யப்படாத தண்ணீராக கருதப்படும்.அது அசுத்தங்களை தூய்மைப்படுத்தும்.
- கலப்படமானதாக காணப்பட்ட நீர், கலப்படமற்றதாக மாற்றம் பெற்றதா அல்லது இல்லையா என்று சந்தேகம் தோன்றினால் அது கலப்படமானதாகவே கருதப்படும் .அது எவ்வித அசுத்தத்தையும் சுத்தப்படுத்தாது.
- 384 லீட்டரின் அளவிற்கு காணப்பட்ட தண்ணீர் , 384 லீட்டரை விட குறைந்து விட்டதா அல்லது இல்லையா என்று சந்தேகித்தால் ; அதனை குறையவில்லை என்றே கருதப்படும். அசுத்தம் அதனுடன் கலப்பதினால் அது அசுத்தமானதாக கருதப்படாது. அதன் நிறம் ,சுவை மற்றும் வாசம் மற்றமடைந்தாலே தவிர.
- 384 லீட்டரை விட குறைவாக காணப்பட்ட தண்ணீர், 384 லீட்டரை விட அதிகமானதா அல்லது இல்லையா என்று சந்தேகம் ஏற்பட்டால் அது குறைவானதாகவே கருதப்படும்.

**384 லீட்டரை விட அதிகமான அளவு கொண்ட தண்ணீரின் மூலம் சுத்தம் செய்யும் முறை:**

அசுத்தங்களை சுத்தப் படுத்துவதற்கு இரு வழிமுறைகளை

கொண்டுள்ளது.

1. பார்வைக்கு தென்படக்கூடிய அசுத்தத்தை(ஐனுந் நஜாஸ்) நீக்குதல்.
2. ஒருமுறை தண்ணீருக்குள் இட்டெடுத்தல் அல்லது அதன் மீது ஊற்றுதல்.

குறிப்பு: குழாய் மூலம் பெறப்படும் தண்ணீர் 384 லீட்டரை விட அதிகமானதாக காணப்பட்டால் அசுத்தங்கள் மீது தண்ணீரை திறந்து விடுவதன் மூலம் அது சுத்தமாகும்.

**384 லீட்டரைவிட குறைவான நீரின் மூலம் சுத்தம் செய்யும் முறை:**

இது மூன்று படிமுறைகளைக் கொண்டுள்ளது.

1. பார்வைக்கு தென்படும் அசுத்தத்தை நீக்குதல்.
2. அசுத்தமான பொருள் மீது தண்ணீரை ஊற்றுதல்.

   அசுத்தமானவை பாத்திரமாகக் காணப்பட்டால் மூன்று முறை தண்ணீர் ஊற்றுதல்.

   அவ்வாறு இல்லையென்றால் அது சிறுநீர் மூலம் அசுத்தமானதாகக் காணப்பட்டால் இரு முறையும் அது தவிர்ந்த ஏனைய அசுத்தமாகக் காணப்பட்டால் ஒரு முறையும் தண்ணீர் ஊற்றுவது அவசியமாகும்.

3.அசுத்தமான பொருள் முறுக்கப்படும் தண்மை கொண்டதாக காணப்பட்டால் தண்ணீர் ஊற்றும் ஒவ்வொரு முறையும் அதனை முறுக்கி அத்தண்ணீரை வெளியெடுப்பது கடமையாகும்.

**பாத்திரங்களை சுத்தப்படுத்தும் முறை:**

- 384 லீட்டரைவிட குறைவான நீராக இருந்தால் கட்டாயம் மூன்று முறை தண்ணீரினால் கழுவப்பட வேண்டும்.
- 384 லீட்டரை விட கூடுதலான தண்ணீராக இருப்பின் ஒரு முறை கழுவினால் போதுமாகும்.

குறிப்பு:

- எந்த வகையான அசுத்தமாக இருப்பினும் முதலாவது பார்வைக்குத் தென்படும் அசுத்தத்தை நீக்க வேண்டும்.அவ்வாறு இல்லையெனின் அதனை சுத்தம் செய்வதில் பிரயோசனம் இல்லை.
- பார்வைக்குத் தென்பதும் அசுத்தத்தை நீக்கி, அதனை சுத்தம் செய்த பின் அதில் அசுத்தத்தின் வாடை அல்லது நிறம் காணப்படுமாயின் எவ்வித பிரச்சனையும் இல்லை.உதாரணமாக இரத்தம் பட்ட ஆடையினை , முதலாவது பார்வைக்குத் தென்படும் அசுத்தத்தை நீக்கி, தண்ணீரின் மூலம் சுத்தம் செய்தன் பின் ஆடையில் இரத்தத்தின் நிறம் காணப்பட்டால் எவ்வித பிரச்சனையும் அல்ல.அது தூய்மையானதாகவே கருதப்படும்.

- சில வகை ஆடைகள் கழுவும் போது ஆடையிளுள்ள நிறங்களை வெளியேற்றும் தண்மை கொண்டவை ,இதன் காரணமாக  அந்த நிறங்களுடன் தண்ணீர் கலந்து கலப்படமான தண்ணீராக மாறாமல் இருந்தால் அந்நீர் ஆடைகளை சுத்தப்படுத்தும்.
- தன்னியக்கி சலவை இயந்திரம் மூலம் ஆடைகளை கழுவுவதாக இருப்பின் ; பார்வைக்கு தென்படும் அசுத்தத்தை நீக்கிய பின்,384 லீட்டரை விட குறைவான நீராக இருப்பின் இரு முறை அதன் மூலம் கழுவி தண்ணீரை பிழிந்து வெளியெடுக்க வேண்டும். அல்லது 384 லீட்டரை விட அதிகமான நீராக இருப்பின் அதாவது குழாய் மூலம் 384 லீட்டரை விட அதிகமான நீருடன் இணைக்கப்பட்டு இருப்பின் பார்வைக்கு தென்படும் அசுத்தத்தை நீக்கிய பின் ஒரு முறை அந்நீரினால் கழுவினால் ஆடை சுத்தம் செய்யப் படும்.
- சலவை இயந்திரம் , கழுவும் பகுதியுத் உலர்த்தும் பகுதியும் வெவ்வேராக காணப்படும் தருணத்தில்; முதலாவது பார்வைக்குத் தென்படும் அசுத்தத்தை நீக்கிய பின் ஆடையினை  இயந்திரத்தினுல் இடவேண்டும். இயந்திரத்திற்கு நீர் செலுத்தும் பகுதி 384 லீட்டரை விட அதிகமான தண்ணீர் தொட்டியுடன் இணைக்கப்பட்டு இருப்பின் கழுவும் பொழுது அதாவது தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கம் தருணத்தில் எவ்வாறாயினும் ஆடையிலிருந்து தண்ணீரை வெளியேற்ற வேண்டும்.உதாரணமாக சலவை இயந்திரத்தை இயக்கும் பொழுவு ஆடைகளில் இருந்து நீர் வெளியேறும்
- சலவை இயந்திரம் ,இயக்கப்படும் சந்தர்ப்பத்தில் 384 லீட்டரை விட அதிகமான  நீருடன் இணைக்கப்படாமல் இருப்பின் ஆடையினை இயந்திரத்திலிருந்து வெளியெடுத்து பிழிய வேண்டும்.பின் இயந்திரத்திற்குள்

தண்ணீர் செலுத்துவதென்றால் 384 லீட்டருடன் இணைக்கப்பட்ட குழாய் மூலம் தண்ணீர் செலுத்த வேண்டும். இவ்வாறு இரு முறை செய்வதன் மூலம் ஆடை சுத்தமாக்கப்படும்.

**உடலினை சுத்தம் செய்யும் முறை:**

- சிறுநீர் மூலம் அசுத்தமாக்கப் பட்டிருப்பின், பார்வைக்குத் தென்படும் அசுத்தத்தை நீக்கிய பின் இரு முறை தண்ணீர் ஊற்ற வேண்டும்.
- இரத்தம் மூலம் அல்லது வேறு ஏதாவது மூலம் அசுத்தமாக்கப் பட்டிருந்தால் பார்வைக்குத் தென்படும் அசுத்தத்தை நீக்கிய பின் ஒரு முறை தண்ணீர் ஊற்றுவது போதுமாகும்.
- நீண்ட முடி உடையோரின் முடி அசுத்தமாக்கப் பட்டிருப்பின் சுத்தம் செய்யம் தருணத்தில் முடியினை பிழிதல் வேண்டும்.
- மனித உடல் உயிர் பிரிவதோடு அது குளிரானதாக மாரிய பின் அசுத்தமாகும். அதனை சுத்தப்படுத்த மூன்று முறை மைய்யித்தை குளிப்பாட்டுவதன் மூலம் சுத்தமாக்கப்படும்.இதன் பின் யாருடையாவரு ஈரலிப்பான உடற்பகுதி மைய்யித்தில் படுமாயின் அவர் தனது உடல் பகுதியினை கழுவ வேண்டும்.
- மூன்று முறை குளிப்பாட்டப் படாத மைய்யித்,குளிர்ச்சியாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் மைய்யத்தை தொடுவாரென்றால் அவர் மைத்தினை தொட்டதற்காக குளித்தல் வேண்டும்.இக்குளிப்பினை நிறைவேற்றாமல் தொழுவது இயலாது.

- மனித உடலினுல் அசுத்தம் ஏற்படுமாயின் , அசுத்தம் இல்லாமல் போவதின் மூலம் அது சுத்தமாகும். உதாரணமாக முரசிலிருந்து இரத்தம் வருதல் இவ்விரத்தம் உமிழ் நீரின் மூலம் கலப்பதால் சுத்தமாக்கப்படும் அல்லது இரத்தத்தை வெளியில் துப்புவதினால் அது சுத்தம் செய்யப்படும். வாயினுல் தண்ணீர் செலுத்துவது அவசியமல்ல.

---

- அசுத்தங்களை(நஜ்ஸ்) உண்ணுதல் ஹராமாகும்.மேலும் அவ்வாறு தற்செயலாக நிகழ்ந்தால் வாயினுல் தண்ணீர் செலுத்துவது அவசியமல்ல.
- செயற்கைப் பல்லினை உபயோகிப்பவர்கள், அது வாயினுல் ஏற்றப்பட்ட இரத்தக்கசிவின் மூலம் அசுத்தமாக்கப் பட்டால் அதனை வெளியேடுக்காமலே தூய்மையாக்கப்படும்.அதாவது வாயினுல் ஏற்பட்ட இரத்தக் கசி நின்று கண்ணுக்குப் தென்படும் அசுத்தமும் நீங்கினால் அது சுத்தமாகும்.
- செயற்கைப் பல்லினை சுத்தப்படுத்துவதற்கு வெளியெடுத்துதான் தூய்மைப் படுத்துவது அவசியமல்ல.
- பற்களுக்கிடையிலான இடைவெளிகளை அடைத்திருக்கும் தருனத்தில், அவை அசுத்தமாக்கப்படுமாயின் அவை இயற்கையானதாக கருதப்படும் சந்தர்ப்பத்தில் அவைகளை சுத்தப்படுத்த வாயினுல் நீர் செலுத்துவது அவசியமல்ல.

## அசுத்தமாக்கப்பட்ட பூயினை சுத்தப்படுத்தும் முறை:

1.பூமி கடினத்தன்மை வாய்ததாகக் காணப்படல் மற்றும் நீரினை ஊற்றும் பேர்து அதன் மீது ஓடும் தன்மை

வாய்ந்ததாகக் காணப்பட்டால்:  384 லீட்டரை விட குறைவான நீராக இருப்பின் அதன் மீது ஊற்றம் தண்ணீர் ஓடுவதன் மூலம் ஓர் இடைவெயிளினூடாக வெளியேறினால் அது சுத்தமானதாக மாற்றப்படும். அவ்வாறு இல்லாமல் அதாவது ஓடும் தண்ணீர் ஓர் இடைவெளியின் ஊடாக வெளியேறாமல் இருந்தால் மேலும் அதனை அனுப்புவதற்கு எவ்வித வழியும் தென்படாவிட்டால், அந்த அசுத்தத்திற்க மேல் ஊற்றப்பட்ட நீரினை ஓரிடத்தில் ஒன்றுசேர்த்து  பின் ஓர் துணியின் மூலம் அல்லது அது போன்ற வேறு ஏதாவது ஒன்றின் மூலம் தண்ணீரை ஈற்றெடுத்தல் வேண்டும். இஹ்தியாத்தின் பிரகாரம் அதன் மீது இரண்டாவது முறையும் தண்ணீர் ஊற்றுவதன் மூலம் தூய்மையாக்கப்படும்.

384 லீட்டரை விட அதிகமான நீர் அல்லது மழைநீர் அல்லது ஓட்டநிலையிலுள்ள நீரின் மூலம் சுத்தம் செய்வதென்றால் அசுத்தமான அனைத்துப் பகுதிக்கும் தண்ணீர் செய்றடைவதன் மூலம் தூய்மையாக்கப்படும். அதனை கழுவிய நீரில் பார்வைக்குத் தென்படும் விதத்தில் அசுத்தம் இல்லாமல் இருந்தால் அதுவும் தூய்மையானதாகக் கருதப்படும்.

2.பூமி மணல் தன்மை வாய்ந்ததாகவும் தண்ணீரினை உறிஞ்ஞக்கூடியதாகவும் காணப்படும் சந்தர்ப்பத்தில் , 384 லீட்டரைவிடக் கூடிய நீர் அல்லது மழைநீர் அல்லது ஓட்டநிலையிலுள்ள நீர் மூலம் சுத்தமாக்கப்படும் அல்லது சூரிய ஒளி அதன் மீது விழுவதன் மூலம் சுத்தமாக்கப்படும்.384 லீட்டருக்கு குறைவான நீரின் மூலம் சுத்தம் செய்யப் படமாட்டாது.

பூமி தண்ணீரினை உறிஞ்ஞுக்கூடியதாகவும் கூழாங்கற்களினால் உருப்பெற்ற பூமியாகவும் காணப்படும் சந்தர்ப்பத்தில் 384 லீட்டரை விட குறைவான நீர் மூலமும் வெளியில் சுத்தமாக்கப்படும்.ஆனால் கற்களுக்கு கீழுள்ள பகுதி அசுத்தமானதாகவே காணப்படும்.

- பூமியின் மீது அல்லது வேறு ஏதாவது பொருளின் மீது அசுத்தம் காணப்படும் சந்தர்ப்பத்தில் குழாய்களின் மூலம் தண்ணீர் ஊற்றும் சந்தர்ப்பத்தில் அதிகமாக தண்ணீர் ஊற்றுவது அவசியமல்ல. மாறாக வெளிப்படையாக பார்வைக்குத் தென்படும் அசுத்தம் நீக்கப்படும் அளவிற்கு தண்ணீர் ஊற்றினால் போதுமாகும்.7
- அசுத்தமாக்கப்பட்ட பொருள் ,முறுக்குவதன் மூலம் தண்ணீர் வெளியேறும் தண்மை வாய்ந்ததாகக் காணப்பட்டால் , அது 384 லீட்டருக்கு குறைவான நீரினால் சுத்தம் செய்யப் பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அதிலிருந்து வெளியேறும் நீர் அசுத்தமாகும் மேலும் அதிலிருந்து வெளியேறும் நீர் வேறு ஏதாவது ஒன்றுடன் இணைவதன் மூலம் அதுவும் அசுத்தமாக்கப்படும்.
- சிறுநீர் மற்றும் மலம் 384 லீட்டருக்கு அதிகமாகக் காணப்படும் தொட்டியுடன் இணைக்கப்பட்டு குழாய் வழியாக சுத்தம் செய்யப்பட்டால் அது சுத்தமாகும்.அல்லது 384 லீட்டரை விடக் குறைவான நீரின் மூலம் சுத்தம் செய்யப்படுமாயின் பின்வரும் நிபந்தனைகளின் பிரகாரம் அது சுத்தமாகக் கருதப்படும்.

1.தண்ணீரில் அசுத்தத்தின் நிறம் ,மணம், சுவை சேராமல் இருத்தல்.

2. வெளியிலுள்ள அசுத்தங்கள் தண்ணீருடன் கலக்காமல் இருத்தல்.

3.மலத்தின் சிறு பகுதிகள் தண்ணீரில் தென்படாமல் இருத்தல்.

4.வெறு அசுத்தங்கள் உதாரணமாக இரத்தம் மலத்துடன் வெளிவராமல் இருத்தல்.

5.வழமைக்கு மாறாக மலம் வெளியேறும் பகுதிக்கு அதிகமாக அசுத்தமாகாமல் இருத்தல்.

## சூரிய ஒளி

சூரிய ஒளி பின்வருவனவற்றை சில நிபந்தனைகளோடு சுத்தப்படுத்தும் தன்மை கொண்ணடது.

1. பூமி
2. மொட்டைமாடி
3. தாவரங்கள்,புற்கள் மற்றும் மரங்கள்
4. கட்டிடங்கள் மற்றும் மதில்கள்
5. யன்னல்கள் மற்றும் ஆணி போன்றவை கட்டிடத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படுபவைகள்.

பின்வரும் நிபந்தனைகள் மூலம் சூரிய ஒளி இவைகளை சுத்தப்படுத்தம்:

- அசுத்தமான பொருள் ஈரலிப்பாக காணப்படல்.அல்லது உலர்ந்து காணப்பட்டால்

அதனை ஈரலிப்பத் தன்மை வாய்ந்ததாக மாற்றுதல்.

- பார்வைக்குத் தென்படும் அசுத்தம் அதில் புலப்படாமல் இருத்தல். மாற்றமாக தென்பட்டால் சூரிய ஒளி அதன் மீது படும் முன் அதனை நீக்குதல்.
- சூரிய ஒளி அதன் மீது விழுதல்.திரைகள் மூலம் உதாரணமாக மேகம் போன்றவை சூரிய ஒளியினை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.சிறியளவிலான மேகமாக இருந்து சூரிய ஒளியினை தடுக்காமல் இருந்தால் பிரச்சனை அல்ல.
- சூரிய ஒளி மாத்திரமே அசுத்தத்தை உலர்த்த வேண்டும்.அதனுடன் காற்று வீசுவதன் மூலம் அது காய்ந்தால் சுத்தமானதாகக் கருதப்படாது.
- சூரிய ஒளி கட்டிட இடைவேளிகளுக்குள் சென்ற அசுத்தங்களை ஒரே தடவை உலர்த்த வேண்டும்.
- ஓர் முறை பூமி மற்றும் கட்டிட அசுத்தத்தின் மீது சூரிய ஒளி படுமாயின் அதனை உலர்த்திவிட்டு மறு முறை சூரிய ஒளி படுவதன் மூலம் அதன் கீழ் பகுதியும் காயுமாயின் சூரிய ஒளி மேற்பகுதியினை மாத்திரமே சுத்தப்படுத்தும் ,கீழ் பகுதி அசுத்தமாகவே காணப்படும்.
- சூரிய ஒளி விரிப்புக்கள் மற்றும் ஆடைகளை சுத்தப்படுத்தாது.

## பூமி

பூமி சில நிபந்தனைகளின் பிரகாரம் பாதம் மற்றும் பாதணியின் அடிப்பகுதியினையும் சுத்தப்படுத்தும்.

நிபந்தனைகள்:

- பூமி சுத்தமாகக் காணப்படல்.
- பூமி உலர்ந்து காணப்படல்.
- பூமி மணல் அல்லது கூழாங்கற்களால் ஆனதாக இருத்தல்.புற்கள் ,இழைகள் மீது நடப்பதினால் அசுத்தம் சுத்தமாக மாட்டாது.
- நடந்ததன் காரணமாக அசுத்தமானதாக இருத்தல் வேண்டும்.
- கண்ணுக்குப் புலப்படும் அசுத்தம்(உ:இரத்தம்),அல்லது சுத்தமாகக் காணப்பட்டவை அசுத்தமாக்கப்பட்டதின் காரணமாக உருவாகியவை (உ: அசுத்தமாக்கப்பட்ட களி) நடக்கும் தருணத்தில் பாதணியின் அடிப்பகுதியிலோ அல்லது பாதத்திலே பட்டிருந்தால் ,நடப்பதன் மூலமாக அல்லது பூமியில் அதனை உரசுவதன் மூலமாக சுத்தமாக்கப்படும்.

**அசுத்தத்தை சுத்தப்படுத்த நடக்கவேண்டிய அளவு:**

பார்வைக்குப் புலப்படும் அசுத்தத்தை நீக்கிவிட்டு பத்தடி நடப்பதன் மூலம் அசுத்தம், சுத்தமாக்கப்படும்.

பாதம் மற்றும் பாதணியின் அடிப்பகுதிகளைத் தவிர வேரு பொருள்களை பூமி சுத்தப்படுத்தாது.

## இஸ்திஹாலா

இஸ்திஹாலா என்பது ஒரு நிலையிலிருந்து மற்றுமோர் நிலைக்கு மாற்றமடைவதைக் குறிக்கும்.

இஸ்லாமிய ஷரீஆ முறையில் “ஒரு பொருள்ஒரு நிலையிலிருந்து மாற்றமடைந்து மற்றுமோர் நிலைக்க உள்ளாகுவதன் காரணமாக அதனுடைய பெயரும் மாற்றமடைதலாகும்”.

உதாரணம்: விறகு சாம்பலாக மாற்றமடைதல், மதுபானம் வினாக்கிரியாக மாறுதல், உப்பலத்தில் விழுந்த நாய் உப்பாக மாற்றமடைதல்.

ஒரு பொருளின் தோற்றம் மாற்றமடைந்து அதனுடைய தன்மை மாற்றமடையவில்லையெனின் அது இஸ்திஹாலா என்று கூறப்படமாட்டாது.

உதாரணம்: சீனி தண்ணீரில் கலக்கப்படல்.

## இன்திகால்

இன்திகால் என்றால் இட மாற்றம் செய்தலாகும்.இஸ்லாமிய ஷரீஆவின் பிரகாரம் ,மனிதனுடைய இரத்தம் அல்லது இரத்தம் பீரிட்டு வெளியேறும் தன்மை கொண்ட விலங்குகளின் இரத்தம், இரத்தம் பீரிட்டு வெளியேறும் தன்மையற்ற விலங்கின் (உ:நுளம்பு)உடம்பிற்குள் இடம் மாற்றப்பட்டால் அவ்விரத்தம் அதனுடையதாகக் கணிக்கப்படும். இது இன்திகால் எனப்படும். இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட இரத்தம் அசுத்தமல்ல. உதாரணமாக மனித இரத்தத்தை நுளம்பு உரிஞ்சி எடுத்து அந்நுளம்பினை அடிக்கும் பொழுது அதன் இரத்தம் ஆடைகளில் படுமாயின் அது அசுத்தமல்ல.

## இஸ்லாம்

இஸ்லாம் என்பது இரு சஹாதத் கலிமாக்களை மொழிவதன் மூலம்

(اشهد ان لا اله الا الله و اشهد ان محمدا رسول الله) (இறைவனுடைய கட்டளைகளை ஏற்று அவனுடைய தூதரின் வழிமுறையில்

நடப்பதாக உறுதியெடுத்து இறை கட்டளைக்கு முன் சரணடைவதாகும்.

காபிர் இஸ்லாத்தினை தழுவுவதன் மூலம் அசுத்தநிலையிலிருந்து தூய்மையான நிலைக்கு மாற்றப்படுகிறான். உடல் , உமிழ்நீர், வியர்வை போன்றவை சுத்தமாகும்.இஸ்லாத்தை ஏற்கும் தருணத்தில்  அவனது உடலில் பார்வைக்குத் தென்படும் அசுத்தம் (உ: இரத்தம்) காணப்படுமாயின் அதனை சுத்தப்படுத்த வேண்டும்.

## தபீய்யத்

தபீய்யத் என்பது ஒன்றை பின்தொடர்தல் என்பதாகும் .இஸ்லாமிய ஷரீஆவின் பிரகாரம், அசுத்தமான ஒரு பொருள் சுத்தமாக்கப்படும் ஒரு அசுத்தத்தின் மூலம் சுத்தமாக்கப்படுவதாகும்.

உதாரணமாக அசுத்தத்தை சுத்தப்படுத்தும் ஒருவருடைய கை , அவ்வசுத்தம் மூலம் அசுத்தப்படுத்தப்படும் பின் அசுத்தம் சுத்தமானால் அவருடைய கையும் சுத்தமாகும்.

மது ,வினாக்கிரியாக மாறுவதன் மூலம் அது இருக்கும் பாத்திரமும் சுத்தமாகும்.

மூன்று முறை மைய்யித்தினை குளிப்பாட்டுவதன் மூலம் மையத்தை வைத்திருந்த இடம் மற்றும் அதனை குளிப்பாட்டியவரின் கை போன்றவை சுத்தமாகும்.

## முஸ்லிமின் பார்வையிலிருந்து மறைந்திருத்தல்

ஓர்  முஸ்லிமின் ஆடை அல்லது அவனது உடல் அல்லது அவனது ஏதாவது ஓர் பொருள் அசுத்தமாக இருக்கம் நிலையிலிரக்கும் தருணத்தில் கண்ணுற்று பின்னர் சிறுது காலம் அவரை காணமலிருக்கும் தருணத்தில் மீண்டும் அவரை அதே பொருளோடு காண்போமானால் அது சுத்தமானதாகக் கருதப்படும்.

## அசுத்தத்தை நீக்குதல்

விலங்கின் உடல் அல்லது பறவையளின் அலகில் (சொன்டு) பார்வைக்குத் தென்படும் விதத்தில் அசுத்தம் காணப்படுமாயின் உதாரணமாக மாட்டின் உடலில் இரத்தம் காணப்படுமாயின் அவ்விரத்தத்தை நீக்குவதன் மூலம் மாட்டின் உடல் சுத்தமாக்கப்படும்.

அதே போல் மனித உடலின் உட்பாகங்கள் உதாரணம் வாயினுள் ,மூக்கினுள் அசுத்தம் காணப்படுமாயின் அதனை நீக்குவதன் மூலம் சுத்தமாகும்.

## இஸ்திப்ராஃ

இஸ்திப்ராஃ என்றால் அசுத்தத்திலிருந்து தூரமாக்குதலாகும்.

அதாவது அசுத்தங்களை உட்கொண்ட ஹலாலான மிருகங்களை அசுத்தங்களை உட்கொள்ள விடாமல் அவற்றை அடைத்து வைத்து சுத்தமான உணவுகளை வழங்குவதாகும்.

மனிதனுடைய மல, சலங்களை உட்கொள்ளும் வழமையுள்ள

விலங்குள் அசுத்தமாகும்.அதனை சுத்தப்படுத்த விரும்பும் சந்தர்ப்பத்தில் இஸ்திப்ராஃ செய்தல் வேண்டும்.

ஒட்டகம்-40 நாட்கள்

மாடு-20 நாட்கள்

ஆடு-10 நாட்கள்

வாத்து-5 நாட்கள்

கோழி- 3 நாட்கள்

மேற்கூறப்பட்ட விலங்குகளை குறிப்பிட்ட நாட்கள் அடைத்து வைத்து சுத்தமான உணவுகளை வழங்குவதன் மூலம் அவை சுத்தமாகும். இல்லையேனின் அவைகளை உண்ணுவது ஹராமாகும்.

## மல சலம் கழிப்பதன் சட்டங்கள்

மனிதனின் அன்றாட தேவைகளில் ஒன்றுதான் தனது கழிவுகளை அகற்றுவதாகும் . அந்த வகையில் மல சலம் கழிக்கும் பொழுது இஸ்லாம் கூறியுள்ள அடிப்படையில் தனது கழிவுகளை அகற்றி அசுத்தத்தினை சுத்தப்படுத்துவது கடமையாகும்.

மல சலம் கழிக்கும் பொழுது கவணிக்கப் படவேண்டிய விடயங்கள்:

1.மல சலம் கழிக்கும் பொழுது மனிதன் கிப்லாவினை முன்னோக்கி அல்லது பின்னோக்கி  தனது கழிவினை அகற்றுவது ஹராமாகும்.

(படம் 83)

குறிப்பு:

- நிர்ப்பந்த நிலையில் கிப்லாவின் பக்கம் மல சலம் கழிக்க நேர்ந்தால் அதனை நிர்னையித்துக் கொள்வதில் அவருக்கு முழுச் சுதந்திரமுண்டு. இருப்பினும் கிப்லாவிற்கு தனது பிற்புறத்தினை அமைத்து கழிவினை அகற்றுவது சிறந்ததாகும்.
- மல சலத்தினை கழிப்பதற்கு எவ்வகையான கழிப்படங்களையும் பயன்படுத்துவதில் பிரச்சனையல்ல .ஆனால் அனைத்து விதமான இடங்களிளும் கிப்லாவின் சட்டத்தினை கடைப்பிடிப்பது அவசியமாகும்.
- மனிதன் மல சலம் கழிக்கும் பொழுதும் மற்றும் ஏனைய இடங்களிளும் தனது அபத்தினை முகல்லபான( மார்க்க விடயங்கனை பின்பற்றுவது கடமையாக்கப்பட்ட –கணவன் மனைவியினைத் தவிர-) ஒருவரின் பார்வையிலிருந்து மறைப்பது கடமையாகும்.

## கழியலறை

நான்கு இடங்களில் மல சலம் கழிப்பது ஹராமாகும்.

1. உரிமையாளர்  அனுமதி வழங்காத இடங்கள்.
2. உரிமையாளர் மல சலம் கழிக்க அனுமதி சழங்காத பூமி.
3. குறிப்பிட்ட சிலருக்காக வக்பு செய்யப்பட்ட இடங்கள்.
4. இழிவு படுத்தும் நோக்கில் முஃமின்களின் அடக்கஸ்தளங்கள் மற்றும் புனிதமான இடங்கள்.

## மல சலம் வெளியாகும் இடத்தினை சுத்தம் செய்யும் முறை

- சிறு நீர் வெளியாகும் இடத்தினை தண்ணீர் மாத்திரமே தூய்மைப்படுத்தும்.(கற்கள்,துணிவகைகள் அசுத்தத்தினை சுத்தப்படுத்தாது)

## சிறு நீர் கழித்ததன் பின் சுத்தம் செய்யும் முறை




## குறிப்பு:

- மல சலம் போன்றவற்றை 384 லீட்டரை விட அதிகமான தண்ணீர் மூலம் சுத்தம் செய்கின்ற போது சுத்தம் செய்கின்ற தண்ணீர் ஆடைகளில் அல்லது உடற்பகுதியினில் படுவதினால் அவை அசுத்தமாகாது. ஆனால் அந்நீரின் நிறம், சுவை மற்றும் வடை மாற்றமடைந்திருந்தால் அது அசுத்தமான நீராகக் கணிக்கப்படும்

## பின் துவாறத்தினை சுத்தம் செய்தல்

இரு முறை மூலம் சுத்தம் செய்யமுடியும்.

1.தண்ணீரினால் கழுவதன் மூலம் அசுத்தம் நீக்கப்பட்டால் மீண்டும் கழுவுவது அவசியமல்ல.

2. மூன்று கற்துண்டுகள் அல்லது சுத்தமான துணி அல்லது இவைபோன்றவைகள் (உ. காகிதங்கள்)மூன்று கற்களினால்

அசுத்தம் சுத்தமாகாவிட்டால் வேறு கற்துண்டுகளினால் அசுத்தத்தை சுத்தப்படுத்த வேண்டும்.மூன்று கற்களுக்கு பதிலாக ஒரு கல்லினை மூன்று பகுதிகளாக பயன் படுத்த முடியும்.

(படம் 85)

- சிறுநீர் மற்றும் மலம் 384 லீட்டருக்கு அதிகமாகக் காணப்படும் தொட்டியுடன் இணைக்கப்பட்டு குழாய் வழியாக சுத்தம் செய்யப்பட்டால் அது சுத்தமாகும்.அல்லது 384 லீட்டரை விடக் குறைவான நீரின் மூலம் சுத்தம் செய்யப்படுமாயின் பின்வரும் நிபந்தனைகளின் பிரகாரம் அது சுத்தமாகக் கருதப்படும்.

1.தண்ணீரில் அசுத்தத்தின் நிறம் ,மணம், சுவை சேராமல் இருத்தல்.

2. வெளியிலுள்ள அசுத்தங்கள் தண்ணீருடன் கலக்காமல் இருத்தல்.

3.மலத்தின் சிறு பகுதிகள் தண்ணீரில் தென்படாமல் இருத்தல்.

4.வெறு அசுத்தங்கள் உதாரணமாக இரத்தம் மலத்துடன் வெளிவராமல் இருத்தல்.

5.வழமைக்கு மாறாக மலம் வெளியேறும் பகுதிக்கு அதிகமாக அசுத்தமாகாமல் இருத்தல்.

**பின்துவாரத்தினை மூன்று இடங்களில் தண்ணீர் மாத்திரமே சுத்தப்படுத்தும்:**

1. மலத்துடன் வேறு அசுத்தங்கள் வெளியேறினால் .உ. இரத்தம்.
2. வெளியிலிருந்து அசுத்தங்கள் பின் துவாரத்தில் படுதல்.

3. வழமைக்கு மாறாக மலம் வெளியேறும் பகுதிக்கு அதிகமாக அசுத்தமாகுதல்.

**குறிப்பு:**

நோயாளிகளின் மல சலம் வெளியேறும் பகுதிகளை சுத்தம் செய்பவர் நோயாளியின் அபத்தினை பார்பது தடையாகும்.மேலும் சுத்தம் செய்யும் பொழுது கை உரைகள் போன்ற வற்றை பயன்படுத்துவது கடமையாகும்.நேரடியாக நோயாளியின் அபத்தில் கைபடுவது தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

**மல சலம் கழிக்கும் பொழுது கவணிக்கப்படவேண்டிய மஹ்ரூஹான விடயங்கள்**

1. அதிக நேரம் கழிவறையில் இருத்தல்.
2. நின்றவன்னம் சிறுநீர் கழித்தல்.
3. மல சலத்தினை தானாக கட்டுப்படுத்தல்.
4. மல சலம் கழிக் கும் பொழுது உண்ணுதல் மற்றும் பருகுதல்.
5. வலக்கையினால் சுத்தம் செய்தல்.

**அசுத்தங்கள்** அனைத்து அசுத்தங்களும் ஹராமாகும் .ஆனால் ஹராம் அனைத்தும் அசுத்தமல்ல.உலகிளுல்ல அனைத்தும் சுத்தமாக கருதப்படும்.ஆனால் பின்வருவனவற்றைத் தவிர.


அசுத்தங்கள்
சிறுநீர்
மலம்
மனிதன் மற்றும் உண்ணுவது ஹராமாக்கப்பட்ட விலங்குகள், பீருட்டுப்பாயும் இரத்தமுள்ள விலங்குகள்
இந்திரியம்
மரணித்தவைகள்
இரத்தம்
மனிதன் மற்றும் பீறிட்டுப் பாயும் இரத்தமுள்ள விலங்குகள்
நாய்
பன்றி
தரையில் வாழ்பவை
மதுபானம்
அனைத்து போதைப் பொருட்களும்
தொலிக்கோதுமை மூலம் செய்யப் படுபவை -பியர்
காபிர்கள்(வேதக்காரர்களைத் தவிர)
அசுத்தங்களை உண்ணும் ஒட்டகத்தின் வியர்வை